Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 186/2022
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.02 , Page.No. 07/2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. அகிலா | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. எழிலசரன் | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 56 |
| **எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை.** | | | 1-3 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 13th day of October 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.2 திருமதி. அகிலா முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 என் கணவர். இவ்வழக்கு எதிரிகளை எனக்கு தெரியாது. அவர்களை பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் வருடம் நினைவில்லை ஒரு நாள் நானும் என் கணவரும் மதியம் 12.30 மணியளவில் ஜீப்யில் திருப்பத்தூரில் இருந்து ஜோலார்பேட்டை நோக்கி சென்று கொண்டிருந்த போது சாலை நகர் அருகே சென்றுகொண்டிருந்த போது ஏதோ பிரச்சனை ஏற்பட்டது. என் கணவர் வாகனத்தை விட்டு கீழே இறங்கினார் பிரச்சனை செய்த நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. யார் வாகனத்தை முட்டினார்கள் என்றும் எனக்கு தெரியாது. காரில் இருந்து இறங்கி சென்ற என் கணவர் சிறிது நேரம் கழித்து வந்து என்னை வீட்டிற்கு அனுப்பி வைத்தார். எனக்கு வேறு ஏதும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்க வில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 09.10.2021 அன்று நானும் என் கணவரும் திருப்பத்தூர் சாலை நகர் அருகே சென்று கொண்டிருந்த போது நாங்கள் சென்ற காரினை முந்தி செல்ல முயன்ற ஒரு ஸ்கார்பியோ வாகனம் எங்கள் கார் மீது உரசியது போல் வந்ததால் அதை என் கணவர் கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ஸ்காபர்பியோ வாகனத்தில் வந்த வழக்கின் எதிரிகள் என் கணவரை ஆபாசமாக திட்டி கீழே தள்ளி விட்டு இரும்பு ராடு மற்றும் மரக்கொம்பு ஆகியவற்றால் என் முன்னிலையில் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. நான் தான் அந்த மரக்கொம்பையும் இரும்பு ராடையும் ஆஜர் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கின் எதிரிகளுடன் சமாதானம் ஆகியவிட்டோம் என்றால் சரிதான். அதன் காரணமாக உண்மை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**